பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 01 2025 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவக் கட்டமைப்புகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- கடல்சார் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
- விவசாயிகள் நலன் காக்கும் அரசாக மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- வட சென்னை வளர்ச்சித் திட்டத்துக்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக மாநில அமைச்சர் திரு சேகர் பாபு கூறியுள்ளார்.
- ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழக அணி - ஹைதராபாத் அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவக் கட்டமைப்புகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் சூரத்தில் புதிய மருத்துவமனைகள் திறப்பு விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், நாடு முழுவதும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் நிறுவப்பட்டுள்ளதாக கூறினார்.

2014ஆம் ஆண்டு சுகாதார துறைக்கு 37 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாகவும், தற்போது அது 98 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 60 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைவதாக அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டில் நாட்டில் 387 மருத்துவக் கல்லூரிகள் மட்டுமே இருந்ததாகவும் தற்போது 766ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<>>>>

கடல்சார் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆழ்கடல் இயக்கம் தொடர்பான வழிகாட்டுதல் குழுவின் கூட்டத்தில், பேசிய அவர், இந்த இயக்கத்தின்கீழ் ஆழ்கடலில் அரியவகை தாதுக்கள், உலோகங்கள் போன்றவை குறித்த தகவல்கள் திரட்டப்படும் என்றார்.

இவை நாட்டின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியமானது என்று அவர் கூறினார்.

இந்தியாவின் ஆழ்கடல் நீர்மூழ்கி வாகனம் 6 ஆயிரம் மீட்டர் ஆழத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

விவசாயிகள் நலன் காக்கும் அரசாக மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மதுரை டங்ஸ்டன் சுரங்க ஒப்பந்தம் தொடர்பாக அப்பகுதி மக்களுக்கு மத்திய அரசு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக திமுக அரசு முறையான விளக்கம் அளிக்காமல் மக்களை திசைதிருப்பும் வகையில் செயல்பட்டு வந்ததாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் டங்ஸ்டன் சுரங்க ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டிக்கும் மேலூர் பகுதி மக்கள் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும் நன்றி தெரிவிப்பதாகவும் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

வட சென்னை வளர்ச்சித் திட்டத்துக்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக மாநில அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழு தலைவருமான திரு சேகர் பாபு கூறியுள்ளார்.

சென்னை எண்ணூர், தண்டையார்பேட்டை பகுதிகளில் அரசுத் திட்டப் பணிகளை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எண்ணூரில் வணிக கடைகளும், சமுதாய நலக்கூடமும் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று திரு. சேகர்பாபு தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய பெண் குழந்தைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளைக் காப்போம், அவர்களுக்கு கல்வி கற்பிப்போம் உட்பட பல்வேறு திட்டங்களை பெண் குழந்தைகள் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

சேலம் மாவட்டதில் இத்திட்டத்தின்கீழ் காவல்துறை சார்பில் அரசுப் பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு கலை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் மாணவிகளின் மனவலிமை அதிகரித்துள்ளதாக மாவட்ட காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் திரு. அண்ணாதுரை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிகள் தங்களுக்கு பயனுள்ளதாக இருந்தது என்று மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

திருவள்ளூரில் உள்ள விமானப்படை கேந்திர வித்தியாலயா பள்ளியில் தேர்வுக்கு தயாராவது குறித்த பிரதமருடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஒட்டி வினாடி வினா போட்டி நடைபெற்றது.

இந்த வினாடி-வினா போட்டி தங்களுக்கு மிகுந்த பயனளித்ததாக இதில் பங்கேற்ற மாணவிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயால் 32 சதுர கிலோ மீட்டர் காடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கலிஃபோரினியா வனத்துறை கூறியுள்ளது.

<<<<>>>>

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த தினத்தை முன்னிட்டு அந்தமானின் ஸ்ரீவிஜயபுரத்தில் நடைபெற்ற ஜெய்ஹிந்த் பாதயாத்திரையில் மத்திய இணையமைச்சர் திருமதி ரக்ஷா நிகில் கட்சே பங்கேற்றார்.

<<<>>>>

பீகாரில் மத்திய அரசுத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மத்திய இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யசோ நாயக் ஆய்வு மேற்கொண்டார்.

<<<>>>>

புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில் நடைபெறும் ஹிப்னோசிஸ் தொடர்பான இரண்டு நாள் சர்வதேச மாநாட்டை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் வானவில் வண்ண மீன் மற்றும் குளிர்நீர் மீன்வளம் குறித்து மத்திய மீன்வளத்துறை செயலாளர் திரு அபிலக்ஷ் லிக்கி ஆய்வு மேற்கொண்டார்.

<<<>>>>

ராமநாதபுரத்தில் சட்டப்பேரவை பொது கணக்குக் குழுவின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

<<<>>>>

பெரம்பலூரில் தமிழக சுற்றுச்சூழல் துறை சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு, மழை நீர் சேகரிப்பு உள்ளிட்டவை தொடர்பாக கலை விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

<<<>>>>

திருவாரூரில் மூன்றாவது புத்தகத் திருவிழா இன்று தொடங்கி அடுத்த மாதம் இரண்டாம் தேதி வரை நடைபெறவுள்ளது.

<<<>>>>

தை அமாவைசையை முன்னிட்டு வரும் 28-ம் தேதி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ராமேஸ்வரத்துக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அரசுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடத்தப்படும் வைகை இலக்கியத் திருவிழாவை மாவட்ட ஆட்சியர் திருமதி பூங்கொடி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம், எலந்தகுட்டை மற்றும் கலியனூர் அக்ரஹாரம் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாவட்ட ஆட்சியர் திருமதி உமா திறந்து வைத்தார்.

<<<<>>>>

நெல்லையில் அனுமதிக்கப்பட்ட அடர்த்தியை மீறி கார் கண்ணாடிகளில் கருப்பு நிற ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தால் அபராதம் விதிக்கப்படும் என்று மாநகர காவல்துறை கூறியுள்ளது.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

சென்னையில் 10 கோடி ரூபாய் செலவில் மகளிருக்கென 39 உடற்பயிற்சிக் கூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழக அணி - ஹைதராபாத் அணியை வென்றது.

ரவுர்கேலாவில் நேற்று நடைபெற்ற போட்டியில் பெனால்டி சூட்அவுட் முறையில் 4-3 என்ற கோல் கணக்கில் தமிழக அணி வெற்றி பெற்றது.

இதன் மூலம் புள்ளிப் பட்டியலில் தமிழக அணி முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஜம்ஷெட்பூர் அணியை வென்றது.

<<<<>>>>

பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தனா தொம்பாரே - இங்கிலாந்தின் **Alicia Barnett** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>